**இவ்வினாத்தாளை குறிப்புகள் கொடுக்கப்படும் வரை திறக்கக்கூடாது பிரிவு அதிகாரி கூறியபின் திறக்கவும்.**

**(Open Candidates) / (பொது விண்ணப்பதாரர்களுக்குரியது)**

| வினாத்தாளின் வகை | பதிவு எண் | வினாத்தாளின் வரிசை எண். |
|---|---|---|
| | | |
| | OMR விடைத்தாளின் எண் | |
| | | |

# TNUSRB – SI 2022
# TAMIL ELIGIBILITY TEST - 03

நாள் & தேதி : வெள்ளிக்கிழமை, 17, ஜுன், 2022 — Time / காலம் : 100 நிமிடங்கள்

நேரம் : மாலை 03:30 மணி முதல் 05:10 மணி வரை — Total Marks / மொத்த மதிப்பெண்கள் : 100

## Instructions – அறிவுரைகள்

1. This question paper contain 70 questions in part A (General knowledge) and 30 questions in part B (Psychology) related subjects.
   இவ்வினாத்தாளில் பகுதி 'அ' பொது அறிவில் 70 வினாக்களும் மற்றும் பகுதி 'ஆ' உளவியல் சம்மந்தமான பாடங்களில் 30 வினாக்களும் உள்ளன.
2. The type of question paer (A,B,C or D) should be shaded in the answer sheet using blue or black ball point pen. The answers sheet without shading the type of question paper will not be evaluated.
   இந்த வினாத்தாளின் வகையை (A,B,C or D)விடைத்தாளில் அதற்குண்டான இடத்தில் நீலம். (அ) கருப்பு நிற பால் பாயின்ட்பேனாவைக் கொண்டு எழுதி பின் பட்டை தீட்டவும். வினாத்தாளின் வகையை பட்டை தீட்டாவிட்டால், அந்த விடைத்தாள் மதிப்பிடப்படமாட்டாது.
3. Write the Registration No. using blue or black ball point pen at the appropriate box in the answer sheet.
   விடைத்தாளில், நீலம் (அ) கருப்பு நிற பால் பாயின்ட் போனவைக் கொண்டு பதிவு எண்ணை அதற்குரிய கட்டத்தில் எழுதி, பின் பட்டை தீட்டவும்.
4. Answer all the 140 questions should be shaded in the relevant circles using blue or black ball point pen.
   Answer all the 140 questions- 140 கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
5. Each question carries half a mark. ஒவ்வொரு கேள்விக்கும் அரை மதிப்பெண் வழங்கப்படும்.
6. The answers to the question should be shaded in the relevant circles using blue or black ball point pen.
   விடைகளை நீலம் (அ) கருப்பு நிற பால் பாயின்ட் பேனாவைக் கொண்டு அந்தந்த வட்டங்களில் பட்டை தீட்டவும்.
7. For each question only one answers is to be chosen and shaded.
   ஒரு வினாவிற்கு ஒரு விடையை மட்டுமே பட்டை தீட்டவும்.
8. For wrong and improper shading, no marks will be given.
   தவறாக பட்டை தீட்டினாலோ, அடித்தல் திருத்தங்கள் செய்தாலோ அந்த கேள்விக்கு மதிப்பெண்கிடைக்காது.
9. Write the Registration No. in the question paper- பதிவு எண்ணை கேள்வித்தாளில் எழுதவும்.
10. Write the SI.No of the OMR answer sheet in the question paper at the appropriate place.
    OMRவிடைத்தாளின் எண்ணை கேள்வித்தாளில் எழுதவும்.
11. If there is any printing error in page No. in the question paper , the same should be brought to the notice of the invigilator immediately.
    உமது வினாத்தாளில் ஏதேனும் அச்சுப் பிழையே, பக்கங்கள் சரியாக இல்லாவிட்டாலோ, மேற்பார்வையாளரிடம் முறையிட்டு சரியான கேள்வித்தாளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
12. All the questions are bilinguial except language questions (English & Tamil)
    பாடப்பகுதி (ஆங்கிலம் மற்றும் தமிழ்) கேள்விகளை தவிர்த்து அனைத்து கேள்விகளும் இரண்டும் மொழிகளிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

முப்படை பயிற்சி மையம் வேலூர், திருச்சி

## "தமிழ் தகுதித் தேர்வு"

1. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் என்ற இதழ்களை நடத்தியவர்
A) வண்ணதாசன் B) வாணிதாசன் C) பெருஞ்சித்திரனார் D) முடியரசன்

2. கல்வெட்டுகள், செப்பேடுகளில் காணப்படும் வரிவடிவங்கள்
A) வரியெழுத்து, வெட்டெழுத்து B) வட்டெழுத்து, தமிழெழுத்து
C) பிராமி எழுத்து, வட்டெழுத்து D) தேவநாகரி, வட்டெழுத்து

3. பறவை பற்றிய படிப்பு
A) ஆர்த்தோலஜி B) ஆர்னித்தாலஜி C) மைக்ராலஜி D) ஆர்க்கியாலஜி

4. அருகில் உள்ளவற்றிற்கும், தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக்காட்ட பயன்படுத்தப்பட்ட அக்கால எழுத்து.
A) அ B) ஆ C) இ D) உ

5. "ஆக்குவது யாதெனில் அறத்தை ஆக்குக" என்று கூறும் நூல்
A) நீதி வெண்பா B) யசோதரக் காவியம் C) வளையாபதி D) குறுந்தொகை

6. தேவாரத்தின் 7ஆம் திருமுறையை அருளியவர்
A) திருநாவுக்கரசர் B) சுந்தரர் C) திருவாசகம் D) பெரியபுராணம்

7. வேறுபட்டதைக் காண் (குமரகுருபரர்)
A) மதுரைக் கலம்பகம் B) திருவாரூர் மும்மணிக்கோவை
C) மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி D) கந்தர் கலிவெண்பா

8. ஒற்றளபெடையில் வரும் எழுத்து
A) க் B) த் C) ய் D) ர்

9. பெரும்பாலும் இடைநிலைக்கும், விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல்.
A) சந்தி B) இடைநிலை C) சாரியை D) பகுதி

10. பொருத்துக:

| | | |
|---|---|---|
| 1. சீர் வகைகள் | - | (a) 7 |
| 2. தளை வகைகள் | - | (b) 8 |
| 3. அடி வகைகள் | - | (c) 4 |
| 4. தொடை வகைகள் | - | (d) 5 |

A) 1(c) 2(a) 3(d) 4(b) B) 1(c) 2(d) 3(a) 4(b)
C) 1 (b) 2 (a) 3 (b) 4(d) D) 1 (a) 2(b) 3 (c) 4 (d)

11. "தமிழகப் பழங்குடிகள்" என்ற நூலின் ஆசிரியர்
A) சுப்ரபாரதி மணியன் B) சோமசுந்தர பாரதி C) மணிபாரதி D) பக்தவத்சல பாரதி

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

12. "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்றவர்.
A) பாரதிதாசன் B) பாரதியார் C) நாமக்கல் கவிஞர் D) கவிமணி

13. பொருத்துக.
1. இரண்டு சீர்கள் - (a) சிந்தடி
2. மூன்று சீர்கள் - (b) நெடிலடி
3. நான்கு சீர்கள் - (c) குறளடி
4. ஐந்து சீர்கள் - (d) கழிநெடிலடி
5. ஆறு சீர்கள் - (e) அளவடி

A) 1(c) 2(a) 3(e) 4(d) 5(b) B) 1(a) 2(b) 3(c) 4(d) 5(e)
C) 1(b) 2(c) 3(a) 4(d) 5(e) D) 1(c) 2(a) 3(e) 4(b) 5(d)

14. அம்பேத்கர் துவங்கிய இதழ்
A) ஒடுக்கப்பட்ட பாரதம் B) பாரத தேசம் C) சுதந்திர பாரதம் D) பாரதமணி

15. தவறான இணையைக் காண்.
A) மூ - மூப்பு B) மே – அன்பு C) யா – அகலம் D) வீ – வண்டு

16. "வானம்பாடி" இயக்க கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்
A) மு.மேத்தா B) கு.ப.ரா C) வண்ணதாசன் D) பூவண்ணன்

17. கன்னிப்பாவை – நூலின் ஆசிரியர்
A) முடியரசன் B) இறையரசன் C) தேனரசன் D) ஆண்டாள்

18. முதற்குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவர்
A) ஒட்டக்கூத்தர் B) சேக்கிழார் C) செயங்கொண்டார் D) புகழேந்தி புலவர்

19. சரியான இணையைக் காண்.
1. கலித்தொகை பாவகை - கலிப்பா
2. கலித்தொகையின் பிரிவுகள் - 5
3. நெய்தற்கலியைப் பாடியவர் - நல்லுந்துவனார்
4. கலித்தொகையை தொகுத்தவர் - நல்லுந்துவனார்

A) 1 மற்றும் 2 B) 1,2 மற்றும் 3 C) 2,3 மற்றும் 4 D) அனைத்தும் சரி

20. பள்ளிப்பறவைகள், பாவியக்கொத்து என்ற நூல்களின் ஆசிரியர்
A) அரங்கசாமி B) துரைராசு C) துரை. மாணிக்கம் D) ராச கோபாலன்

21. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் - என்றழைக்கப்படுபவர்
A) அரங்கசாமி B) துரைராசு C) துரை. மாணிக்கம் D) ராதாகிருஷ்ணன்

22. பாரதியாருக்கு 'செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன்' என்ற பட்டங்களை வழங்கியவர்
A) பாரதிதாசன் B) மு.வ C) வாணிதாசன் D) முடியரசன்

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

23. "தென்தமிழ்த் தெய்வபரணி" என்று கலிங்கத்துப் பரணியை புகழ்ந்தவர்
A) ஒட்டக்கூத்தர் B) புகழேந்தி C) சேக்கிழார் D) இளங்கோ

24. தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம்.
A) உதகை B) மேட்டுப்பாளையம் C) கோயம்புத்தூர் D) திருச்சி

25. தவறானதைக் கண்டறிக.
A) க. = கா B) ..க = கை C) கெ. = கௌ D) .கொ = கௌ

26. திணை, பால், எண், இடம் ஆகியவைக் காட்டும் பகுபத உறுப்பு
A) இடைநிலை B) பகுதி C) விகுதி D) சாரியை

27. 1920 இல் 'காரல் கபெக்' என்பார் முதன்முதலில் பயன்படுத்திய ஒரு சொல்.
A) என்ஜின் B) ரோபோ C) ரோபாட்டிக் D) சூப்பர் பாஸ்ட்

28. இசைநிறை அளபெடையின் மற்றொரு பெயர்
A) செய்யுளிசை B) இன்னிசை C) சொல்லிசை D) எதுவுமில்லை

29. தவறான இணையைக் காண்
A) புகைப்படச்சுருள் / வெடிமருந்து தொழிற்சாலை – நீலகிரி
B) யூகலிப்டஸ் - வளர்க்கப்படும் மாவட்டம் - நீலகிரி
C) மலர் உற்பத்தியில் முதலிடம் - திண்டுக்கல்
D) தமிழ்நாட்டின் ஹாலந்து – சிவகாசி

30. தவறான இணையைக் காண்:
A) உடல் பகுதி பித்தளை + வாய்பகுதி ஆட்டுத்தோல் - உடுக்கை
B) பெரிய உடுக்கை – தவண்டை
C) சிறிய உடுக்கை – குடுகுடுப்பை
D) உடுக்கை வகை – கஞ்சக் கருவி

31. "உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்" என்று கூறும் நூல்.
A) புறநானூறு B) அகநானூறு C) குறுந்தொகை D) நற்றிணை

32. தவறானதைக் காண்.
A) வருக்கை - பலா B) மதியம் - நிலவு C) அடிசில் - சோறு D) பணை - கட்டில்

33. முதற் கருவி என்றழைக்கப்படுவது
A) பறை B) திமிலை C) வீணை D) மத்தளம்

34. தவறான ஒன்றனைக் காண்க.
A) வேற்றுமை உருபுகள் - அது, கண்
B) பன்மை விகுதிகள் - கள், மார்
C) சொல்லுருபுகள் - அல், இல்
D) பிரிநிலை பொருளில் அதிகமாக வரும் இடைச்சொல் - ஓ.

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

35. பொருத்துக (எழுத்துக்கள் பிறப்பு)

1. நாவின் முதற்பகுதி + அண்ணத்தின் அடிப்பகுதி பொருந்துதல் - (a) ட், ண்
2. நாவின் நுனி + அண்ணத்தின் நுனி பொருந்துதல் - (b) ள்
3. நாவின் அடி + மேல்வாய் அடிப்பகுதியைப் பொருந்துதல் - (c) ய்
4. மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்து தடவுதல் - (d) க், ங்

A) 1(c) 2(b) 3(d) 4(a) B) 1(d) 2(a) 3(c) 4(b)
C) 1 (d) 2 (c) 3 (a) 4(d) D) 1 (d) 2(c) 3 (a) 4 (b)

36. வாழ்த்துதல், வைதல், வேண்டல் பொருளில் வருவது

A) தெரிநிலை வினைமுற்று B) குறிப்பு வினைமுற்று
C) ஏவல் வினைமுற்று D) வியங்கோள் வினைமுற்று

37. தவறான இணையைக் காண்க.

A) இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன்
B) எதிர்கால இடைநிலைகள் - ப், வ், க்
C) நிகழ்கால இடைநிலைகள் - கிறு, கின்று, ஆ நின்று
D) உடம்படுமெய் சந்தி - த், ப், க்

38. இருவகை வினைகளாக செயல்படும் சொற்கள்

A) பார், போ B) தா, தள்ளு
C) ஆம், இரு D) இயலாது, வேண்டும்

39. 'இராசகோபாலன்' எனும் இயற்பெயர் கொண்டவர்.

A) சுரதா B) வாணிதாசன் C) முடியரசன் D) தாராபாரதி

40. பொருத்துக.

1. கார் அறுத்தான் - (a) முதலாகு பெயர்
2. ஐந்து மீட்டர் வெட்டினான் - (b) தொழிலாகு பெயர்
3. வற்றல் தின்றான் - (c) காலவாகு பெயர்
4. முல்லைத் தொடுத்தாள் - (d) நீட்டலளவை ஆகு பெயர்

A) 1(c) 2(d) 3(b) 4(a) B) 1(c) 2(b) 3(d) 4(a)
C) 1(b) 2(a) 3(c) 4(d) D) 1(a) 2(b) 3(d) 4(c)

41. 'உலகத் தமிழாய்வு மன்றம்' உருவாக காரணமாக இருந்தவர்

A) பெரியார் B) பெருஞ்சித்திரனார்
C) தனிநாயகம் அடிகள் D) சாலை இளந்திரையன்

42. இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை, ஆர்யபட்டா ஏவுதலுக்கு காரணமானவர்

A) விக்ரம் சாராபாய் B) ராகேஷ் சர்மா
C) அப்துல் கலாம் D) மயில்சாமி அண்ணாதுரை

43. லாவோட்சு அவர்களின் சிந்தனைப் பிரிவு

A) தாவோயியம் B) மெய்யியலிசம்
C) தாவியம் D) ஆன்மீக மெய்யியல்

முப்படை பயிற்சி மையம், வேலூர், திருச்சி

44. சரியானவற்றினைக் காண்க.
1) இஸ்ரோ தொடங்க முயற்சி மேற்கொண்டவர் - விக்ரம் சாராபாய்
2) செயற்கைகோள் ஏவு ஊர்தி தகவல்கள் - சித்தாரா செயலி
3) கடல்பயண செயலி - நேவிக்
4) இளைய கலாம் - சிவன்

A) 1,2 மற்றும் 3 B) 1,2 மற்றும் 4 C) 2,3 மற்றும் 4 D) 3 மற்றும் 4

45. தமிழ் எழுத்துக்களின் வகைகள்.
A) இரண்டு B) மூன்று C) நான்கு D) ஆறு

46. பொருத்துக.
1) அப்துல் கலாம் விருது - (a) அருணன் சுப்பையா
2) செவ்வாய் சுற்றுகலன் திட்ட இயக்குநர் - (b) சிவன்
3) கையருகே நிலா - (c) வளர்மதி
4) சித்தாரா செயலி - (d) மயில்சாமி அண்ணாதுரை

A) 1(c) 2(d) 3(b) 4(a) B) 1(b) 2(d) 3(a) 4(c)
C) 1(d) 2(a) 3(c) 4(b) D) 1(c) 2(a) 3(d) 4(b)

47. இயற்கை ஓவியம்
A) கலித்தொகை B) சீவக சிந்தாமணி C) பத்துப்பாட்டு D) கம்பராமாயணம்

48. "தமிழ்மொழி வடமொழியின் மகளன்று. அது தனிக் குடும்பத்திற்கு உரிய மொழி" என்றவர்
A) பெரியார் B) ஜி.யு. போப் C) கால்டுவெல் D) அண்ணா

49. பணத்தாளில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ள நாடுகள்
A) மொரீசியஸ், இலங்கை B) சிங்கப்பூர், மலேசியா
C) சீனா, இலங்கை D) மலேசியா, சீனா

50. "திங்கள், ஞாயிறு, மழை"
ஆகியவற்றை வாழ்த்தித் தொடங்கும் பாடலைக் கொண்ட காப்பியம்
A) மணிமேகலை B) சிலப்பதிகாரம் C) சீவக சிந்தாமணி D) குண்டலகேசி

51. "சிட்டுக் குருவியின் வீழ்ச்சி" என்ற நூலை எழுதியவர்
A) டாக்டர். முகமது அலி B) டாக்டர். அலி
C) டாக்டர். சலீம் அலி D) டாக்டர் அகமது அலி

52. பகுபத உறுப்புகள்.
A) மூன்று B) நான்கு C) ஐந்து D) ஆறு

53. 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனையினை அமைத்தவர்
A) இராமாமிர்தம் அம்மையார் B) கடலூர் அஞ்சலையம்மாள்
C) முத்துலட்சுமி அம்மையார் D) பண்டித ரமாபாய்

முப்படை பயிற்சி மையம் - வேலூர் - திருச்சி

54. குமரகுருபரர் எழுதாத நூல் ஒன்று
A) சகலகலாவல்லி மாலை
B) மதுரைக்கலம்பகம்
C) மதுரை பதிற்றுப்பத்தந்தாதி
D) திருவாரூர் மும்மணிக்கோவை

55. "பூட்கையில்லோன் யாக்கை போல" என்று கூறும் நூல்
A) திருக்குறள் B) பெரியபுராணம் C) புறநானூறு D) நாலடியார்

56. காமராசருக்கு மணிமண்டபம் உள்ள இடம்.
A) சென்னை B) விருதுநகர் C) கன்னியாகுமரி D) மதுரை

57. பொருந்தாத ஒன்றனைக் காண்.
A) வேதிகை - திண்ணை
B) தாமம் - மாலை
C) வசி - மழை
D) கலாம் - காற்று

58. அமைதி, மேன்மை ஆகியவற்றைக் குறிக்கும் தமிழ்க் குணம்
A) சத்துவம் B) தாமசம் C) இராசசம் D) வைதருப்பம்

59. சீவக சிந்தாமணியில் சீவகன் வரைந்த ஓவியம்.
A) குதிரை ஓவியம்
B) கட்டியங்காரன் ஓவியம்
C) அரண்மனை ஓவியம்
D) குணமாலை ஓவியம்.

60. "மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்" என்று கூறும் நூலின் பெயர்
A) சீவகசிந்தாமணி B) மணிமேகலை C) சிலப்பதிகாரம் D) நாலடியார்

61. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி
A) காரைக்கால் அம்மையார்
B) நீலாம்பிகை அம்மையார்
C) ஆண்டாள்
D) மணிமேகலை

62. "அக்கறை" என்ற புதுக்கவிதையின் ஆசிரியர்
A) கு.ப. ராஜகோபாலன் B) ந. பிச்சமூர்த்தி C) கல்யாண்ஜி D) மு. மேத்தா

63. 2016 -இல் வண்ணதாசனின் சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்ற நூல்
A) ஒளிலே தெரிவது
B) கலைக்க முடியாத ஒப்பனைகள்
C) ஒரு சிறு இசை
D) உயரப் பறத்தல்

64. "ஒரு சிறு இசை" என்ற நூலின் ஆசிரியர்
A) வண்ணதாசன் B) சா. கந்தசாமி C) ஈரோடு தமிழன்பன் D) கவிஞர் தமிழ்ஒளி

65. பாலைத்திணைப் பாடியதால் பெயர்பெற்ற புலவர்
A) பெருங்கடுங்கோ B) நப்பூதனார் C) பேயனார் D) அம்மூவனார்

66. "போலச்செய்தல்" என்ற பண்புடன் தொடர்புடைய ஆட்டம்
A) புரவி நாட்டியம் B) ஒயிலாட்டம் C) தெருக்கூத்து D) தோற்பாவைக்கூத்து

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி

67. "போந்தை வேம்பே ஆரென வரூஉம் மாபெருந் தானையர் மலைந்த பூவும்" – என்று கூறும் நூல்

A) அகத்தியம் B) தொல்காப்பியம்
C) புறப்பொருள் வெண்பாமாலை D) இறையனார் அகப்பொருள்

68. சரியான இணையைக் காண்:

1. கலைஞாயிறு – நா. முத்துசாமி
2. திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஓர் பகுதி – தெருக்கூத்து
3. தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள் ஒன்று – தேவதுந்துபி
4. மரப்பாவை பற்றிய குறிப்பு – திருக்குறள்

A) 1 மற்றும் 2 B) 1, 2 மற்றும் 4 C) 1, 2 மற்றும் 3 D) 2, 3 மற்றும் 4

69. ம.பொ.சிவஞானம் அவர்கள் தொடங்கியது

A) தமிழக கழகம் B) தமிழாசிரியர் கழகம்
C) தமிழரசு கழகம் D) தமிழ்ப்பண்பாட்டு கழகம்

70. வானத்திலிருந்து பார்க்கும் போது 'தமிழ்நாடு' என்று தோன்றும் வண்ணம் கட்டட அமைப்பு பெற்றுள்ள பல்கலைக்கழகம்.

A) தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் B) சென்னைப் பல்கலைக்கழகம்.
C) மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் D) பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

71. 'நாகர்கோவில்' என்ற இடத்தில் சிலை அமையப்பெற்ற தமிழ் உணர்வுப் போராளி

A) மங்கலங்கிழார் B) ம.பொ. சிவஞானம்
C) செங்கல்வராயன் D) மார்ஷல். ஏ. நேசமணி

72. "செம்மைச்சான்ற காவிதிமாக்கள்" என்ற தொடரில் 'காவிதி மாக்கள்' என்பதன் பொருள்

A) மன்னர்கள் B) வள்ளல்கள் C) புலவர்கள் D) அமைச்சர்கள்

73. "நான் மனிதன்: மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்கு புறமன்று" இக்கூற்றினை கூறியவர்

A) செனக்கா B) அரிஸ்டாட்டில் C) லாவோட்சு D) தெறன்ஸ்

74. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை மன்னர் கவரி வீசிய புலவர்

A) கீரந்தையார் B) நக்கீரர் C) மோசிக்கீரனார் D) குடபுலவியனார்

75. கற்பாவை, நட்சத்திரங்களின் நடுவே – என்ற நூல்களின் ஆசிரியர்

A) தி.சொ. வேணுகோபாலன் B) நாகூர் ரூமி
C) கு.ப. ராஜகோபாலன் D) உமா மகேஸ்வரி

76. இருபாலருக்கும் பொதுவாக அமைந்த பருவம்

A) அம்புலி B) சிற்றில் C) அம்மானை D) சிறுதேர்

77. பகுத்தறிவு கவிராயர்.

A) மருதகாசி B) கண்ணதாசன்
C) உடுமலை நாராயணகவி D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

முப்படை பயிற்சி மையம் - வேலூர் - திருச்சி

78. தவறான இணையைக் காண்: (வாழ்ந்த காலம்)
A) குமரகுருபரார் – 17ஆம் நூற்றாண்டு
B) பரஞ்சோதி முனிவர் – 17ஆம் நூற்றாண்டு
C) குலசேகர ஆழ்வார் – 8ஆம் நூற்றாண்டு
D) வீரமாமுனிவர் – 16ஆம் நூற்றாண்டு

79. 'ஆத்மசிந்தனை' என்ற தொகுப்பு நூலின் ஆசிரியர்
A) கு.ப. ராஜகோபாலன்
B) தி.சொ. வேணுகோபாலன்
C) உமா மகேஸ்வரி
D) கா.ப. செய்குத்தம்பி பாவலர்

80. வினைமுற்றுத் தொடர்
A) சென்ற கோதை
B) நல்ல மாணவன்
C) படித்தான் பாரி
D) கண்ணா வா

81. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழக்கமிட்ட தமிழ்ப்போராட்ட வீரரின் சாகித்திய அகாதமி விருதுபெற்ற நூல்
A) பிசிராந்தையார்
B) எனது போராட்டம்
C) வேரில் பழுத்த பலா
D) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

82. உயிரளபெடை.......... வகைப்படும்
A) 4
B) 5
C) 3
D) 2

83. குறுக்கம் ........... வகைப்படும்
A) 5
B) 6
C) 3
D) 4

84. தேனரசன் நூல்கள்.
A) வெள்ளை ரோஜா,மண்வாசல்
B) மண்வாசல், கருப்பு மலர்கள்.
C) கருப்பு மலர்கள், வெள்ளை ரோஜா
D) பெய்து பழகிய மேகம், கருப்பு மலர்கள்.

85. ஒற்றளபெடையில் வரும் எழுத்து
A) க், ங்
B) ய், ல்
C) ர், ழ்
D) ப், ம்

86. அதிவீரராமப் பாண்டியன் எழுதாத நூல் ஒன்று
A) நைடதம்
B) வாயுசம்கிதை
C) வேதாரண்ய புராணம்
D) திருக்கருவை அந்தாதி

87. "நன்னன்" என்ற குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல்
A) கூத்தராற்றுப்படை
B) நெடுநல்வாடை
C) பொருநராற்றுப்படை
D) சிறுபாணாற்றுப்படை

88. சரியான இணையைக் காண்:
1) விசும்பில் ஊழி ஊழ் ஊழ் - பரிபாடல்
2) ஐந்தாம் திருமொழி – பெருமாள் திருமொழி
3) கபிலரின் நண்பர் – குலேச பாண்டியன்
4) நட்சத்திரங்களின் நடுவே நூல் - நாகூர் ரூமி
A) 1 மற்றும் 2
B) 2 மற்றும் 3
C) 3 மற்றும் 4
D) 1 மற்றம் 4

89. செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பனவற்றை உரைநடையில் கொண்டு வந்தவர்.
A) ரா.பி.சேதுபிள்ளை
B) மு.வ
C) திரு.வி.க
D) தொ.ப.மீ.

முப்படை பயிற்சி மையம் வேலூர், திருச்சி

90. "காணி நிலம்" என்ற பாடலின் ஆசிரியர்

A) பாரதிதாசன் B) பாரதியார்
C) கவிமணி தேசிக விநாயகம் D) வள்ளலார்

91. "கற்பாவை" என்ற நூலின் ஆசிரியர்

A) உமா மகேஸ்வரி B) சே. பிருந்தா
C) நாகூர் ரூமி D) கு.ப. ராஜகோபாலன்

92. சிறுபஞ்சமூலம் - இந்நூலில் மூலம் என்பது

A) ஐந்து B) ஆழம் C) கருத்து D) வேர்

93. தமிழ்விடு தூது – நூலை முதன் முதலில் பதிப்பித்தவர்

A) மு.வ B) தொ.ப.மீ C) உ.வே.சா D) ம.பொ.சி

94. நொ.து-என்பதன் பொருள்கள் முறையே.

A) துன்பம், நோய் B) நோய், துன்பம் C) நோய், உண் D) உண், நோய்

95. "கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்" என்ற பாடல் வரிகளை எழுதியவர்

A) கல்யாண்ஜி B) வண்ணதாசன் C) வைரமுத்து D) உமா மகேஸ்வரி

96. சிறுவர்கள் தென்னை இளநீரை அமர்ந்து பருகிய இடமென இராவணகாவியம் குறிப்பிடுவது

A) புன்னை மரநிழல் B) காஞ்சி மரநிழல் C) கமுகு மரநிழல் D) அகில் மரநிழல்

97. ஜான் ஷெப்பர்டு பாரன் - கண்டறிந்தது

A) ஒளிப்படி இயந்திரம் B) தொலைநகல் இயந்திரம்
C) இணைய வணிகம் D) தானியங்கி பண இயந்திரம்

98. தமிழ் எழுத்துக்களில் பெரும்பாலானவை

A) வலஞ்சுழி எழுத்துக்கள் B) இடஞ்சுழி எழுத்துக்கள்
C) ஒற்று எழுத்துக்கள் D) இவற்றில் எதுவுமில்லை

99. சன்மார்க்க சாண்ட மாருதம்.

A) வள்ளலார் B) முத்துஇராமலிங்கர் C) ராஜாஜி D) பெரியார்.

100. Phoneme – என்பதன் தமிழ்ச்சொல்

A) உருபன் B) ஒலியன் C) ஒளியன் D) அலைவீச்சு

முப்படை பயிற்சி மையம் - வேலூர், திருச்சி


முப்படை பயிற்சி மையம்
வேலூர் & திருச்சி
இரண்டாம்நிலை காவலர்
(POLICE) தேர்வுக்கான மற்றும்
சார்பு ஆய்வாளர் (SI)
உடற்தகுதி தேர்வுக்கான
புதிய வகுப்புகள் துவங்கும் நாள்
27-06-2022
அட்மிஷன் நடைபெறுகிறது
FOR ADMISSION CONTACT
VELLORE 7200400395 / 398
TRICHY 8111070706 /708







# REGULAR PHYSICAL ACTIVITY

**Morning - 5:30 to 8 : 30 am | Evening - 4:30 to 7 : 00 pm**